(14) (112)

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

'ඉසුරුපාය', බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
'இசுருபாய', பத்தரமுல்ல, இலங்கை.
'Isurupaya', Battaramulla, Sri Lanka.
+94112785141-50 +94112784846
isurupaya@moe.gov.lk www.moe.gov.lk

මගේ අංකය / எனது இல. / My Ref. ED/09/17/03/13(v) — ඔබේ අංකය / உமது இல. / Your Ref. — දිනය / திகதி / Date 2019.05.21

சுற்றறிக்கை இலக்கம் : **28/2019**

சகல மாகாண பிரதம செயலாளர்கள்,
சகல மாகாணக் கல்விச் செயலாளர்கள்,
சகல மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள்,
சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள்,
சகல கோட்டங்களுக்குப் பொறுப்பான பிரதி/ உதவிக் கல்விப் பணிப்பாளர்கள்,
சகல அதிபர்கள்,

## அகில இலங்கை பாடசாலை றொபோ போட்டித் தொடர் மற்றும் ஆக்கக் கண்காட்சி

தொழில்நுட்பம் துரிதகதியில் முன்னேற்றமடைந்து வரும் கட்டத்தில் உலகில் றொபோ தொழில்நுட்ப பிரவேசம் மீது கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது. இத்துறையுடன் இணைந்த அறிவு, சிந்தனை மற்றும் பிரயோக கலைசார் முறை பயிற்சிகளை மேற்கொண்டு எதிர்கால வேலை உலகின் சவால்களை எதிர்கொள்வதற்காக மாணவர் பரம்பரையினை தயார்படுத்துவதற்கும் அவர்களின் ஆக்கத் திறமைகளை மேம்படுத்துவதற்கும் கல்வி அமைச்சினால் அகில இலங்கை பாடசாலை றொபோ போட்டி மற்றும் கண்காட்சியினை நடாத்துவதற்கான பணிகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

**01. நோக்கம்** :-

1. பாடசாலை பிள்ளைகளின் மறைந்துள்ள திறமைகளை வெளிப்படுத்தல், ஊக்குவித்தல் மற்றும் மதிப்பீடுகளை மேற்கொள்ளல்.

2. எதிர்கால வேலை உலகின் திசைகள் தொடர்பில் விளக்கத்தை சமகாலப்படுத்தல், நவீன சிந்தனைகள் மீது பிள்ளைகளை ஈடுபடுத்தல் மற்றும் அதன் மூலம் பிள்ளைகளின் புத்தாக்க இயலுமைகளை மேம்படுத்தல்.

3. உலகில் துரிதகதியில் முன்னேற்றமடைந்து வரும் தொழில்நுட்ப முன்னேற்றங்களுக்கு இலங்கையின் கல்விப் பிரவேசத்தை உறுதிப்படுத்தல்.

4. றொபோ தொழில்நுட்பக் கல்வி தொடர்பில் அரசாங்கத்தின் தலையீட்டினை பலப்படுத்தி பாடசாலை மாணவ மாணவியர்களின் இயலுமைகளை நாடுபூராகவும் பிரபல்யப்படுத்தல்.

5. எதிர்கால வேலை உலகு மற்றும் ஊழியர் சந்தைக்குப் பொருத்தமான வகையில் அவசியப்படும் றொபோ அறிவுசார்ந்த திறமைகளை மாணவர் மத்தியில் விருத்தி செய்வதன் மூலம் தன்னியக்க செயற்பாடுகள் தொடர்பிலான தொழில்முயற்சி சிந்தனையினைத் தாபித்தல்.

வருடாந்தம் நடாத்தப்படும் பாடசாலை போட்டியில் கீழ்க் குறிப்பிட்ட விடயங்கள் வலியுறுத்தப்படுகின்றன.

**02. போட்டிக்காகத் தழுவப்படும் விடயப்பரப்புக்கள் :-**

கீழ்க் குறிப்பிடப்பட்ட தலைப்பு இலக்கங்களில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு றொபோ தொழில்நுட்பத்தின் பயன்பாடு அவ்வவ் துறைகளுக்கமைய ஆக்கங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

| தலைப்பு இலக்கம் | துறைகள் |
|---|---|
| 01. | உற்பத்திக் கைத்தொழில் மற்றும் சுற்றாடல் கற்கைத் துறை<br>➢ விவசாய, கடற்றொழில், ஏனைய உற்பத்திகள் மற்றும் சுற்றாடல் செயற்பாட்டுத் துறைகளின் செயற்பாடுகளை இலகுபடுத்தக்கூடிய அல்லது செயற்பாட்டு தன்னியக்கத்தினை அடிப்படையாகக் கொண்ட றொபோ ஆக்கம் |
| 02. | கல்வித் துறைகள்<br>➢ கற்றல் கற்பித்தல் செயற்பாட்டின் பண்புசார் தரத்தை விருத்திச் செய்யக்கூடிய வகையில் றொபோ ஆக்கம்<br>➢ கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை இலகுபடுத்துவதற்காக பயன்படுத்தக்கூடிய றொபோ ஆக்கம் |
| 03. | பொறியியல் தொழில்நுட்பம் மற்றும் உற்பத்தித் துறை<br>➢ செயற்பாட்டு தன்னியத்திற்குரிய றொபோ ஆக்கம்<br>➢ உற்பத்தி தொழில்நுட்பச் செலவினத்தை கட்டுப்படுத்தும் றொபோ இயந்திரம் |
| 04. | கழியாட்டத் துறைகள்<br>➢ கழியாட்டம்/ விளையாட்டு விவகாரத்திற்காக பயன்படுத்தக்கூடிய றொபோ இயந்திரம் |
| 05. | சுகாதாரம் மற்றும் வைத்திய விஞ்ஞானத் துறை<br>➢ சுகாதாரப் பாதுகாப்பு அல்லது வைத்திய செயற்பாடுகளுக்காக பயன்படுத்தக்கூடிய றொபோ ஆக்கம் |

**03. போட்டி மட்டம்**

I. இலங்கையின் 09 மாகாணங்களைத் தழுவக்கூடிய வகையில் தேசிய மற்றும் மாகாண சபைப் பாடசாலைகளில் 6 ஆம் தரம் தொடக்கம் 13 ஆம் தரம் வரையான கல்விச் செயற்பாடுகளில் ஈடுபடும் 18 வயதை விடக் குறைந்த பாடசாலை மாணவர்களுக்கு இதற்காக பங்கேற்க முடியும்.

II. அனைத்து பாடசாலைகளிலும் (அரச, உதவி நன்கொடை பெறும் பாடசாலை) மற்றும் பிரிவெனா மாணவ மாணவிகளுக்கு இப்போட்டிக்காக இணைய முடிவதுடன், மேற்கூறப்பட்ட விடயங்கள் கிடைக்கப்பெற்ற முறைகளுக்கமைய தாபிக்கப்பட்ட றொபோ தொழில்நுட்பத்தின் பயன்பாட்டு உபகரணங்கள்/ செயற்பாடுகளை தமது பாடசாலையின் அதிபர்/ பிரிவெனாப் பொறுப்பாளரின் பரிந்துரைக்கமைய மாகாணப் போட்டிக்காக சமர்ப்பிக்க முடியும்.

III. மாகாண மட்டத்தில் மேற்கூறப்பட்ட துறைகளுக்கமைய முதலாவது, இரண்டாவது, மூன்றாவது, நான்காவது மற்றும் ஐந்தாவது இடங்களைப் பெற்றுக்கொள்ளும் ஆக்கங்களின் இறுதிப் போட்டி உட்பட இதற்கிணைவாக நடைபெறும் கணகாட்சிக்காகவும் சமர்ப்பிக்கப்படும்.

IV. மாகாணப் போட்டியில் வெற்றியீட்டும் ஆக்கங்களில் அவ்வவ் துறைகளுக்குரிய இறுதிப் போட்டியில் முதலாவது, இரண்டாவது, மூன்றாவது இடங்கள் தேர்ந்தெடுக்கப்படுவதுடன் வெற்றியாளர்களுக்கு கல்வி அமைச்சினால் சான்றிதழ், வெற்றிக் கேடயம் மற்றும் பரிசில்கள் வழங்கப்படுவதுடன், கிடைக்கக்கூடிய நிதி அளவு கீழே குறிப்பிட்டவாறு அமைகின்றது.

| | | |
|---|---|---|
| முதலாவது | - | ரூபா. 25,000.00 - 01 |
| இரண்டாவது | - | ரூபா. 15,000.00 - 01 |
| மூன்றாவது | - | ரூபா. 10,000.00 - 01 |
| திறமை | - | ரூபா. 5,000.00 - 04 வது இடத்தில் இருந்து 10 வது இடம்வரை. |

V. அவ்வவ் துறைகளில் முதலாவது இடத்தை பெற்றுக்கொள்ளும் பாடசாலைகளுக்கு அப்பாடசாலைகளில் தொழில்நுட்பக் கல்வியினை ஊக்குவிப்பதற்காக ரூபா 25,000.00 நிதி வழங்கப்படும்.

**04. கால எல்லை :-**

பாடசாலை மட்டத்திலான போட்டி - ஜுலை 30 க்கு முன்னர்

தேசிய போட்டி - ஒக்டோபர் 31 க்கு முன்னர்

**05. ஏற்பாடு மற்றும் நடுவர் செயற்பாடுகள் :-**

மாகாணப் போட்டி

மாகாண மட்டத்திலான போட்டி மாகாண தொழில்நுட்பப் பாடங்களுடன் தொடர்புபடுத்தி பிரதிக் கல்விப் பணிப்பாளர்/ உதவிக் கல்விப் பணிப்பாளரினால் ஒழுங்கு செய்யப்பட வேண்டும். மாகாணத்தில் ஒழுங்கு செய்யப்படும் போட்டித் தொடரின் நடுவர் சபையின் உள்ளீடுகள் கீழே குறிப்பிடப்பட்டவாறு அமைய வேண்டும்.

- பல்கலைக்கழகத்தின் றொபோ தொழில்நுட்பம் / இலத்திரணியல் மற்றும் மின் பொறியியல் விஞ்ஞானம் / இலத்திரணியல் மற்றும் தொலைத்தொடர்பு பொறியியல் விஞ்ஞானம் / இயந்திர பொறியியல் விஞ்ஞானம் / செயற்கை அறிவு அல்லது உரிய துறைகளின் அளவு சார்ந்த அறிவு கொண்ட விரிவுரையாளர்கள் அல்லது அத்துறைகளின் பட்டயப் பொறியியலாளர்கள்.
- கல்வி அமைச்சின் தொழில்நுட்பக் கல்விக் கிளையினால் பெயரிடப்பட்ட உத்தியோகத்தர்கள்.
- மாகாண தொழில்நுட்பப் பாடம் / பொறியியல் தொழில்நுட்பவியல் பாடத்திற்குப் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர் / உதவிக் கல்விப் பணிப்பாளர்.
- ஏனைய மாகாணங்களை பிரதிநிதித்துவப்படுத்தி துறைகள் தொடர்பிலான விளக்கம் கொண்ட ஆசிரியர்கள்.
- மாகாண மட்டத்தில் போட்டியின் இறுதி நடுவராக மாகாணக் கல்விப் பணிப்பாளர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**06. தேசிய போட்டி :-**

கல்வி அமைச்சின் தொழில்நுட்பக் கல்வி கிளையினால் தேசிய போட்டி ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

தேசிய போட்டி நடுவர் சபையின் உள்ளீடு கீழ்க் குறிப்பிட்டவாறு அமைகின்றது.

- பல்கலைக்கழகத்தின் றொபோ தொழில்நுட்பம் / இலத்திரணியல் மற்றும் மின் பொறியியல் விஞ்ஞான / இலத்திரணியல் மற்றும் தொலைத்தொடர்பு பொறியியல் விஞ்ஞானம் / இயந்திர பொறியியல் விஞ்ஞான செயற்கை அறிவு அல்லது உரிய துறைசார்ந்த அறிவு கொண்ட இரு விரிவுரையாளர்கள் அல்லது இப்பிரிவின் இரண்டு பட்டயப் பொறியியலாளர்கள்.
- கல்வி அமைச்சின் தொழில்நுட்பக் கல்விப் பணிப்பாளர் மற்றும் அவரினால் பெயரிப்படும் இரு உத்தியோகத்தர்கள்.

**07. நடுவர் சபை :-**

கல்வி அமைச்சின் செயலாளரினால் பெயரிப்பட்ட இரு பிரதிநிதிகள் நடுவர் சபையாக செயற்படுவதுடன், இச் சபையானது போட்டியின் நடுவர் சபைச் செயற்பாடுகள் தொடர்பில் இறுதித் தீர்மான சபையாகும். இவ் ஆலோசனைகளுக்கமைய தங்களது கல்லூரியின், மாகாணத்தில் மாணவர்களுக்கிடையே றொபோ தொழில்நுட்பத்தை பிரபல்யப்படுத்தும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படும் என எதிர்பார்க்கிறேன்.

இலங்கை மாணவ மாணவியர்களின் எதிர்கால எழுச்சிக்காக மேற்கொள்ளும் இப்பணிக்கு தங்களிடமிருந்து கிடைக்கும் தொடர்ச்சியான பங்களிப்பினைப் பாராட்டுகிறேன்.

செயலாளர்,
கல்வி அமைச்சு.